Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பெறுநர் 0000

அனுப்புநர்

[redacted]

முதன்மை செயலர் /உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

ஆணையாளர்
புனித தோமையார் ஊராட்சி ஒன்றியம்,
சிட்ல பாக்கம்.

கடித எண்.: பி2/12038/2018 தேதி:12.02.2019

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – நில அளவை எண். 153/1, 153/2, 171/1, 171/2A, 172/1B1, 172/1B2, 172/1C1, 172/1C2, 172/2A, 172/2B, 172/2C , 180/1, ஒட்டியம்பாக்கம் கிராமம், புனித தோமையார் ஊராட்சி ஒன்றியத்தில், உத்தேசிக்கப்பட்ட வாகன நிறுத்து தளம் + 4 தளங்கள் கொண்ட, 260 குடியிருப்புகளுடன் கூடிய பிளாக் எண்.1 முதல் 6 வரை மற்றும் பிளாக் எண்.7 தரைதளம் மற்றும் + மூன்று தளங்களுடன் கூடிய கிளப் House மற்றும் நீச்சல் குளம் குடியிருப்பு உபயோகக் கட்டிடம் கட்டுவதற்கு – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக

பார்வை:
1. சிறப்பு கட்டிடப் பிரிவு எண்.BS2/322/2018 நாள் 10.07.2018.
2. அரசாணை (பல்வகை) எண். 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 30.12.2013 (த.நா.அ. அறிக்கை வெளியீட்டு நாள் 29.01.2014).
3. அரசாணை (பல்வகை) 194, வீ.வ.மற்றும் ந.வ.துறை நாள் 30.12.2013 (TNGG Notification dated 29/01/2014).
4. அரசாணை (பல்வகை) எண்.78, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 4.5.2017.
5. அரசாணை (பல்வகை) எண்.85, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 16.5.2017.
6. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கடித எண்.6188/UD-4(3)/2017-8 நாள் 13.6.2017.
7. அரசாணை (பல்வகை) (3D)எண்.89, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 11.5.2017.
8. அரசாணை (பல்வகை) எண்.135, வீ.வ,மற்றும் ந.வ.துறை (SC1-2) நாள் 21.7.2017.
9. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 13.11.2018.
10. திறந்தவெளியிடம் மற்றும் இணைப்பு சாலை & அகலப்படுத்துவதற்கான தானப்பத்திர எண்.368/2019 நாள் 11.01.2019 மற்றும் 369/2019, நாள்.11.01.2019 மூலம் செ.பெ.வ.குழுமத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.
11. பொது பணி துறையிடமிருந்து தடையின்மை சான்றிதழ் (CE/PWD) பெறப்பட்ட கடித எண் DB/T5 (3)/F – 009550 & 011119 – ஒட்டியம்பாக்கம் 2018/M/16.11.2018 மற்றும் நீர்வள துறையிடமிருந்து தடையின்மை சான்றிதழ் (EE/WRD) பெறப்பட்ட கடித எண் JDO 3/F Lease Agreement /1628 m நாள்.05.12.2017.
12. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 24.01.2019

****

நில அளவை எண். 153/1, 153/2, 171/1, 171/2A, 172/1B1, 172/1B2, 172/1C1, 172/1C2, 172/2A, 172/2B, 172/2C, 180/1, ஒட்டியம்பாக்கம் கிராமம், புனித தோமையார் ஊராட்சி ஒன்றியத்தில், உத்தேசிக்கப்பட்ட வாகன நிறுத்து தளம் + 4 தளங்கள் கொண்ட, 260 குடியிருப்புகளுடன் கூடிய பிளாக் எண்.1 முதல் 6 வரை மற்றும் பிளாக் எண்.7 தரைதளம் மற்றும் + மூன்று தளங்களுடன் கூடிய கிளப் House மற்றும் நீச்சல் குளம் குடியிருப்பு உபயோகக் கட்டிடம் கட்டுவதற்கு பார்வை–1 ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–9–ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. பார்வை–9 இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண் B008618 நாள் 05.12.2018–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

Scanned by CamScanner

50

வளர்ச்சிக் கட்டணம்	ரூ.4,10,000/-	ரசீது எண் B 008612 நாள் 05.12.2018
வரண்முறைப்படுத்தும் கட்டணம்	ரூ.5,55,000/-	
கூர்ந்தாய்வுக் கட்டணம்	ரூ.70,000/-	
கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்:	ரூ.65,00,000/-	
அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி	ரூ. 10,000/-	
கழிவுநீர் தொட்டிற்கான காப்புறுதி கட்டணம்	ரூ.2,79,000/-	
உள்கட்டமைப்புக் கட்டணம்	ரூ.87,22,000/-	
உறைவிடக் கட்டணம் (Shelter Fee)	ரூ.65,42,000/-	

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிகளுக்கான வடிவமைப்புகளை உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பதிவு செய்யப்பட்ட தொழில்சார்ந்த வல்லுனர்களிடமிருந்து இவ்வலுவலகத்தில் சமர்பிக்கப்பட்ட போதுமான வடிவமைப்பு பற்றிய சான்றிதழின்படி (Design Sufficiency Certificate for STP) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட வேண்டும். மேலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

5. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும், அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. எண்.பி/சிறப்புக்கட்டிடம்/ 21 / A to I /2019 நாள் 12 .02.2019 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 12 . 02.2019 இருந்து 11 .02.2024 வரை செல்லுபடியாகும் (Permit No.12404).

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் புனித தோமையார் ஊராட்சி ஒன்றியத்தை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே

Scanned by CamScanner

சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை [illegible]தா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளுபடியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சிஅமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. உத்தேச திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்திற்கு அரசாணை எண்.97, MAWS Depat., நாள்.07.07.2015 ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும் மற்றும் நீச்சல் குளத்தை கட்டுவதற்குமுன் அதற்குரிய செயல் குழுமத்திடமிருந்து (Executive Authority) முன் அனுமதி தடையின்மை சான்றிதழை பெற்று அதனை கட்டுமானம் கட்ட ஆரம்பிப்பதற்கு முன் பெறப்பட வேண்டும். மேலும், கட்டிட முழுமைச் சான்றிதழுக்கு விண்ணப்பம் விண்ணப்பிக்கும்போது சமர்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

13. ஊத்தேச கட்டுமானத்திற்காக சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு இசைவினை சுற்றுசூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்தின் முன் அனுமதி பெற்றப்பின்னர் தான் இந்த திட்டத்திற்கான கட்டிடத்தை கட்ட ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

14. பார்வை 11ல் பெறப்பட்ட உத்தேச திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஒட்டியம்பாக்கம் ஓடையின் மேலே அமைக்கப்பட்ட RCC கல்வெட்டில் நீர் நிரம்பும் நிலையினை (Inundation point of view) கண்டறிந்து அதனை பயன்படுத்துவதற்கான பொதுப்பணித்துறையிடமிருந்து (PWD) பெறப்பட்ட தடையில்லா சான்றிதழில் இணைக்கப்பட்டுள்ள மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு குறிப்பிட்டுள்ள 1 முதல் 15 வரையிலான நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும் மற்றும் நீர்வளத்துறையிடமிருந்து (WRD) பெறப்பட்ட சூத்தகையில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைபிடித்து மற்றும் ஒப்பந்தம் 08.09.2020 புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இத்திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

15. ,"தமிழ்நாடு அரசு, அரசாணை எண் G.O.Ms.No.112, H&UD Dept. நாள் 22.6.2017–ல் கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மனை/கட்டிடம் விற்பவர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், அக்கட்டிட, மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது."

தங்கள் உண்மையுள்ள,

12/2/19

முதன்மை செயலர் /
உறுப்பினர்–செயலருக்காக

12/2/19

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

Scanned by CamScanner

நகல்:

1. M/S.CASA GRANDE AXIOM PRIVATE LIMITED.
   Rep by Thiru. Sumanth Krishna
   No.111, 5th தளம்,
   L.B. சாலை, திருவான்மியூர்,
   சென்னை– 600 041

2. உறுப்பினர்
   உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

3. வருமானவரி ஆணையர்
   168, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

4. துணைதிட்ட அமைப்பாளர்
   செயலாக்கப்பிரிவு (தெற்கு), செ.பெ.வ.குழுமம், சென்னை– 600 008

Scanned by CamScanner

000026

Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 12404
B/Spl. Bldg/21/A to I/2019 Date of Permit 12-02-2019

File No. B2/12038/2018

Name of Applicant with Address M/s. Casa Grande Axiom Private Limited rep by Thiru. Sumanth Krishna 111, 5th Floor, L.B. Road, Thiruvanmiyur, Chennai-600 041.

Date of Application 11-07-2018

Nature of Development : ~~Layout~~/~~Sub-division of Land~~/Building construction/~~Change in use of Land~~/Building

Site Address PP for the Proposed construction of Stilt Floor + 4 Floors Residential building group development with 6 Blocks Stilt + 4 Floors with 250 dwelling units (Block No. 1 to Block No. 6) and one block Club House Ground + 3 Floors with swimming pool in total 7 blocks comprised in S.No. 153/1,2, 171/1,2A, 172/1B1, 1B2, 1C1, 1C2, 172/2A, 2B, 2C & 180/1 of Otteyambakkam village.

Division No.

Development Charge paid Rs. 4,10,000/- Challan No B005618 Date 05-12-2018

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building construction/~~change in use of land~~/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 11/02/2024

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

For MEMBER SECRETARY 12/2/19

G.S.
11/2/2019

Scanned by CamScanner

CONDITIONS

Note : 1. According to Section 79 of the T. & C. P. Act 1971 (Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision of order of the Planning Authority Under section 49 or sub section (1) of section 54 may appeal to the Government within Two months from the date on which the decision or order was communicated

2. The Member Secretary, Chennai Metropolitan Development Authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either on wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse of procedural formalities to be followed or permit having been obtained by any fraudulent manner.

Scanned by CamScanner

55. 0000

அனுப்புநர்

திருமதி.பி.பிரசன்ன வசந்தி, M.A., B.Ed.
ஆணையாளர்
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்
(இ)சிட்லபாக்கம், சென்னை - 64.

பெறுநர்

தனி அலுவலர் / துணை இயக்குநர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

ப.மு. 1146 /2019/அ4

நாள். 15.2 /2019.

அய்யா,

பொருள் - திட்ட அனுமதி - புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் - துரைப்பாக்கம் ஊராட்சி - சர்வே எண். 153/1, 171/1, 2A, 172/1B1, 1B2, 1C1, 1C2, 172/2A, 2B, 2C, 180/1, மனை எண். ..... திட்ட அனுமதி அளிக்கப்பட்டது - கட்டிடம் 172/2A, 2B, 2C அனுமதி மற்றும் ~~மனை உட்பிரிவு~~ அளிக்கும் பொருட்டு அனுப்புதல் - சார்ந்து.

பார்வை -

1. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை செயலர் கடித எண்.15029/நச.1/98 நாள்.23.06.1999
2. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண். 28784/ 99/ பிசி2 நாள். 05.07.1999
3. சென்னை பெருநகரம், வளர்ச்சிக் குழுமம், கடிதம் ஆர்.டி.1/ 23815/97 நாள்.08/99
4. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண். B2/12038/18 நாள். 12-2-2019
5. மனுதாரர் திரு / திருமதி.

பார்வை 4ல் காணும் மனுதாரருக்கு துரைப்பாக்கம் ஊராட்சியில் சர்வேஎண். 153/1, 171/1, 2A, 172/1B1, 1B2, 1C1, 1C2, 172/2A, 2B, 2C, 180/1, மனை எண். NIL ல் கட்டிடம் கட்ட திட்ட அனுமதி / ~~மனை உட்பிரிவு~~ அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திட்ட அனுமதி அளிக்கப்பட்ட வரைபடம் மற்றும் பெர்மிட் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி மனுதாரரிடம் கட்டிட அனுமதி / ~~மனை உட்பிரிவு~~ அனுமதிக்கான கட்டணங்களை வசூலித்து கட்டிட அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆணையாளர்
புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்
(இ)சிட்லபாக்கம்

இணைப்பு- திட்ட அனுமதி / ~~மனை உட்பிரிவு~~ அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்கள், திட்ட அனுமதி மற்றும் பெர்மிட் 15/2/2019

நகல் :- திரு / திருமதி

M/s Casa Grande Custom Pvt Ltd.
Rep by Sumanth Muralidhar.
No. 111 5th floor L.B. Road
Thiruvanmiyur Chennai 41

(தங்கள் கட்டிட / மனை உட்பிரிவு அனுமதி பெற தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) துரைப்பாக்கம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது)

Applicant has remitted MWK. charges Rs 33,040/- on 04/02/19 DA 15.2.19

Scanned by CamScanner

57

000032

ஒட்டியம்பாக்கம் கிராம ஊராட்சியின் தனி அலுவலர் மற்றும் வட்டார வலர்ச்சி அலுவலர் (கி.ஊ)

புனித தோமையார் மலை அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை - திரு.பா.சிவஞானசுந்தரம்

கி.உ.எண்- 147/2018-19

மு.மு.எண்- 1146/19/B14/15.2.19 நாள் 15.2.19

பொருள் தி.க. கட்டிட வரைப்பட அனுமதி - ஒட்டியம்பாக்கம் ஊராட்சி -
தரைப்பகுதி அலகு ஒன்று தெரு
ரோடு, புல எண் 153/1,2, 171/1, 2A 172/B1, 182, 101, 102,
மனை எண். 172/2A, 2B, 2C, 120/1
ஆகியவற்றில் கட்டிடம் / சுற்றுசுவர் /

கிணறு - முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை

1. திரு./ திருமதி Sumanth krishna, M/s Casa Grande Axion pvt Ltd.
அவர்களின் மனு நாள்.

2. ஆணையாளர் புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்
ஆவர்களின் ப.மு.எண். 1146/19/B14/15.2.19.

ஜத்திரவு -

M/S திரு / திருமதி. Casa Grande Axion pvt, Ltd, Sumanth Krishna. என்பவருக்கு
தி.நகர் மேற்கு கிராமம் தரைப்பகுதி அலகு ஒன்று தெரு
புல எண் 172/2A மனை எண் ஊராட்சி ஆகிய பகுதிகளில்
கட்டிடம் / சுற்றுசுவர் / கிணறு – கழிப்பிடம் / குளியலறை / கடைகள் முதல் தளம் / இரண்டாம் / தரை + 7 floor.
தளம் / பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் ஆகியவைகள் கட்டவதற்கு கீழ்கண்ட
நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது ..... ம் தேதி வரை ஒரு ஆண்டுக்கு
செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ. 29,55,430 (ரூபாய்
இருபத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்தி ஐயாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) செலுத்தியமைக்கான பலவகை ரசீது
எண் 42174 நாள் 15.02.19 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்கள்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. Chq. no: 046655 / 15.02.19

நிபந்தனைகள்

1.கட்டிடத்தின் முன்பக்கத்தில் 3.5 மீட்டருக்கு குறையாமலும் , பின்பகுதியில் 3.5 மீட்டருக்கு குறையாமலும் இரு பக்கங்களிலும் 1.5 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விட்டிருக்க வேண்டும்.

2.தமிழ்நாடு ஊராட்சியின் 1995-ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

3.அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமம் செய்வது கூடாது.

Scanned by CamScanner

4. கட்டிட வேலைகள் நடக்கும்பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைப்படங்களை வைத்திருத்தல் வேண்டும்.

5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்காவிடில் அனுமதியை மீண்டும் புதிதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.

6. அனுமதிக்கப்பட்ட வரைப்படத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குறிய திருத்தப்பட்ட வரைப்படங்களுடன் தலைவர்/நிர்வாக அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து உத்திரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புரம்பாகவோ பெற்றதாமிருந்தால் பேற்படி உத்திரவை ரத்துசெய்ய தனிஅலுவலருக்கு உரிமை உண்டு.

8. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமாக பொது சுகாதாரகேடு விலைவிக்காத வகைமில் வைத்து இருத்தல் அவசியம்.

9. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்றபின்பே குடிப்புக வேண்டும்.

10. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை மனுதாரர் தன் செந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புரப்படுத்தும் வகைமில் வடிகால்களும் கழிவுநீர்த் தொட்டிகளும் அமைத்துக்கெள்ள வேண்டும்.

11. கட்டிடம் தொழிலகங்களுக்காகவே அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சகாதார அலுவலரிடமிருந்து எதாழலகங்களின் ஆய்வாலரிடமிருந்து மற்றும் உறுப்பினர் செயலர் சென்னை பெறுநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிட வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு அவ்வூராட்சிமிலிருந்து சான்றிதழ் பெற்றுக்கெள்ள வேண்டும்.

13. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேரிய பின்னறோ 15தினங்களுக்குள்ளாக தலைவர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

14. கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.

15/2/19

தனி அலுவலர்
ஒட்டியம்பாக்கம் ஊராட்சி
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்

15.02.19.


பெறுநர்

திரு/திருமதி. Samarth Krishna.

M/s Casa Grande Axiom Pvt. Ltd.

Thoraipakkam Ch-41.

Scanned by CamScanner



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate